Regd. No. M. 4408.] [தனிப் பிரதி 0—1—6.

ஆசிரியர்:- G. தெக்ஷணாமூர்த்தி பிள்ளை. உதவி ஆசிரியர்:- G. கண்ணுசாமி பிள்ளை.

"AGASTHIAN."

# அகஸ்தியன்.

மாதாந்தர சித்த வைத்தியத் தமிழ்ப் பத்திரிகை.

நோய்நாடி நோய்முதனாடி யது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்

அற்றல் அளவறிந்துண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கு மாறு — குறள்

மலர் 2. திருத்துறைப்பூண்டி 1942-ளு ஏப்ரல்-மீ 1௳ இதழ் 3.

## பொருளடக்கம்.


| | |
|---|---|
| தாயின் போதனை | 'பக்தன்.' |
| அனுபவ வைத்திய முறைகள் | ஷத்கிரி ஷண்முகானந்தன் |
| நடமாடுங் கோயில் திருப்பணி | குமாரி G. K. கமலா |
| ரஜஸ்வலை | 'நீலாம்பிகை' |
| சித்த வைத்தியத்தின் வலிமை | Dr. N. சுப்பிரமணியம் L.I.M. |
| ஊர்க்காப்புச் சங்கம் | ... .... .... .... |
| இலகு வைத்தியப் பகுதி | K. சுந்தரத்தம்மாள் |
| உதயசங்கரன் | நாகை என். பாலசுப்ரமண்யம் |
| மந்திர சக்தி | கா. ந. பா. |
| சித்த வைத்தியம் | அ. சிதம்பர முதலியார் |


## தாயின் போதனை.

"பக்தன்"

1. மட்டித் தொழி லொன்றுஞ் செய்யாதே—
பெண்ணே
மட்டுக் குடித்தனங் கற்றுக் கொள்ளாய்!
வெட்டி மொழிகளைப் பேசாதே—பெண்ணே
வேண்டும் பணிகளைச் செய்திடுவாய்!

2. எட்டு வயதில் இளம் பிள்ளையோ—பெண்ணே
ஏற்ற மணம்வரும் ஏழாண்டில்
குட்டி வளர்த்திடுந் தாயாவாய்—இதைக்
கூட்டி மனதுக்குள் வைத்துக் கொள்ளாய்!

3. மாமி மனதையுங் கோணாமல் —பெண்ணே
மாமன் மகிழும் வகையறிந்து
ஊமைபோல் வாயைத் திறக்காமல்—பெண்ணே
வந்த விருந்தை யுபசரிப்பாய்!

4. கடவுள் மறக்கினும் பாபமில்லை – பெண்ணே
கணவன் துதியைக் கனவிலுஞ் செய்!
கடவுள் உனக்குக் கிருபை செய்வார்—
பெண்ணே
காதல் மனையறங் கற்றுக் கொள்வாய்

அகஸ்தியனில் பிரசுரமாகும் கதைகள் கட்டுரைகளில் காணபபடும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள்.
அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.

# அனுபவ வைத்திய முறைகள்.

### சிவராஜயோகம்.

1. அமிர்தமுண்ண ஆனாலும் கூடு மோசொல்
ஆதிசிவன் கடைந்தெடுக்கும் ஆழி மீதில்
அமிர்தமுண்ண அப்பனுமாய் ஆத்தாள் கூடி
ஆதித்தன் அம்புலியாய் அணைந்த வாறும்
அமிர்தமது குண்டலியா மூலந் தன்னில்
அணைந்தேருஞ் சோமகலை அருவி பாய
அமிர்தமது கண்டவிஷம் கண்டத் தூணி
யாருமறி யாமலதை யணைத்துக் கூட்டு.

2. கூட்டுகையில் கூகூகூ வெனவே நாதம்
கூடிமிக ஓசையிடும் கூறெண் ணாது
வாட்டமிக அடையாமல் வருந்திக் கூடி
வாயுவிலே வருங்காம வளிகண் டோடி
தேட்டமிக அடைந்தபராஞ் சோதி யான
தேவகுரு சந்நதியில் திடமாய் நின்று
தேட்டமிக அடைந்தவர்க்குத் தேவி பூஜை
தேனமிர்தம் பங்கிட்டாள் தேவி மாது.

வாசி மலர்வளியே வருங்காம நீரதுவும்
காசியெனக் கெங்கை கரைபுரள—ஊசிநீர்
உள்ளமதி லுண்ட வுவரிளன் றறிவர்
கள்ளமது கொண்டவர்கள் காண்.

காணில் கரிமுகனைக் கண்ட மதில்நிறுத்த
ஊணில் உருத்தரித்த உத்தமியாள்—பேணிமிக
வல்லபையின் யோனி வரும்பாதை தானிருக்க
தில்லையிலே தேன்வடியும் தேசி.

தேசி யெனும்நாமம் தேடக் கிடைக்குமோசொல்
பாசி படருமனம் பாழாக—வாசிகண்டு
வர்ணப் பெரும்பூதம் வரும்பாதை கண்டுவா
சொர்ண முகமாறும் சோதி.

சோதிகண்ட ஆறுமுகம் சொன்னஅறு வீடதுவும்
வாதிகண்ட மேல்வீட்டின் வளியேறி—சோதிமணிக்
கண்டத் துணைவருடன் கலந்துணரும் போகமிது
கண்டவர்கள் விண்டதில்லை காண்.

### சாதிலிங்கச் செந்தூரம்.

ஒரு பலம் லிங்கம் ஒரு கட்டியாக எடுத்து முருங்கப்பட்டை தேங்காய்ப் பிரமாணம் அரைத்து அதன் மத்தியில் லிங்கத்தை வைத்து, மண் சீலை செய்து உலர்த்தி 50 எருவில் புடமிட்டு கல்வத்தில் அரைத்து வைத்துக் கொள்ளவும். பணவிடை அளவு தேன், சுக்கு, பனைவெல்லம் இவைகளில் இருவேளையும் சாப்பிட சுரங்கள், வாயு, மூலவாயு, பித்தவாயு முதலியவை தீரும். குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு வயதுக்குத் தகுந்தபடி அரிசியிடைமுதல் பணவிடை வரை உபயோகிக்கலாம்.

ஷத்கிரி ஷண்முகானந்தன்,
சிவராஜயோகி,
புதுவயல்.

# நடமாடுங் கோயில் திருப்பணி.

திரு. G. K. குமாரி கமலா,
திருவாரூர்.

கற்களை யடுக்கி பிருமாண்டமாகக் கட்டப்பெற்றிருக்கும் ஆலயங்கள் புறவிஷயங்களுக்கு ஒத்தவை. நான்குவித புருஷார்த்தங்களை யடையும் பொருட்டு ஜீவர்கள் அடையும் ஆலயம் இந்தச் சரீரமே யாகும். இதன் உயர்வை,

படமாடுங் கோயிற் பக்தர்க்கொன்
றீயின்
நடமாடுங் கோயில் நம்பர்க் கொன்
றாகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன்
றீயின்
படமாடுங் கோயிற் பக்தர்க்கொன்
றாகும்.

என்னும் திருமூலர் திருவாக்கிற் காணலாம். இவ்வரிய நடமாடுங்கோயில் பழுதுறாது பாதுகாத்தலிற் குரியவை கீழே சொல்லப்படுகின்றன.

பரங்கிப்பட்டை, கொடிவேலி வேரின் பட்டை, அமுக்கிராக் கிழங்கு, செங்கதாரிப் பட்டை, வேம்பாடப் பட்டை, திப்பிலி இவைகள் சரி இடை சேர்த்துப் பால்விட்டு அவித்து உலர்த்தி இடித்து வடிகட்டி திரிகடி யளவு பசுநெய்யில் கலந்து சாப்பிட்டு உப்பு புளி நீக்கி பத்தியமிருந்தால் ஸ்திரீகளுக்கு குழந்தைப் பாலுண்டாகும்; மேக நீர்ப்புண் நிவர்த்தியாகும்.

உயர்ந்த முதிர்ந்தசந்தனக்கட்டைத் தூள், அகில் கட்டைத்தூள், அதிமதுரம், ஏலம், கிராம்பு, சோம்பு, லவங்கப் பட்டை, கார்போக விதை, அருகம் வேர், சித்தாமுட்டி வகைக்கு சரி இடை சேர்த்து உலர்த்தி இடித்து வடிக்கட்டி குழைவுசீனி கலந்து காலை மாலை திரிகடி யளவு சாப்பிட்டுவர மேகவெட்டை, சீழ்மேகம், வெள்ளை விழுதல் முதலியவை குணமாகும். புளி காரம் நீக்கவும்.

கோடகசாலை இலையை அரைத்து ஆவின்பால் கறந்த உடனே அதில் கழற்சிக்கா யளவு கலக்கி காலை தோறும் கொடுத்து காரம் புளி நீக்கி ஆகாரம் கொடுக்கப் பெரும்பாடென்னும் உதிரப் பெருக்கு குணமாகும்.

# "அகஸ்தியன்."

மாதம் ஒருமுறை வெளிவரும் ஓர் உயரிய வெளியீடு.

தாய் மொழித் தமிழை ஆய்வுற வின்பம். சித்த வைத்தியத்தை நத்துதலின்பம்.

மலர் 2. | திருத்துறைப்பூண்டி 1942-௵ ஏப்ரல்-௴ 1உ | இதழ் 3.


பெண்ணுலகம்.

## ரஜஸ்வலை.

### கடிதம் 5

பிரியமுள்ள கமலத்துக்கு நீலாம்பிகை எழுதிக்கொண்டது. உபயக்ஷேமம். க்ஷேமந் தெரிவிக்கவும்.

உனது கடிதம் கிடைத்தது. ஆனால் சந்தோஷப்படுவதற்கான விஷயங்கள் இல்லையே என்றுதான் வருத்தம். இதோ பார்! பெண் என்று பிறந்துவிட்டால், நிர்மலமான மனசு வேணும். கோபதாபங்கள் கூடவே கூடாது. பொறுமை, ஆசை, கோபம், வசைதொடுத்தல் என்னும் நாலும் நமக்கு குற்றங்களாகும். அவற்றைத் தள்ளிவிட்டு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் நான்கு பொக்கிஷங்களையும் பெற்றுப் பாதுகாக்க வேண்டும். இவைதான் பெண் என்று நம்மை உலகத்தார் போற்றுவதற்கான அரிய குணங்களாயிருக்கின்றன. இவற்றின் முக்கியத்தை நான் ரொம்ப சொல்ல வேண்டியதில்லை. ஆகையால், "...சினங்காக்க காவாக்கால் தன்னையே கொல்லும் சினம்" என்னும் திருவள்ளுவர் வாக்கிற்கு இணங்க உனது கொழுந்தன் மீது உனக்கு ஏற்பட்டிருக்கும் கோபத்தைத் தணித்துக் கொள்வாய் என்று நம்புகிறேன். இனி இந்தக் கடிதத்தில் ரஜசைப்பற்றி மேனாட்டு வைத்தியர்கள் கண்டுபிடித்திருக்கும் சில ருசிகரமான விவரங்களை எடுத்து எழுதுகிறேன் கவனிப்பாயாக!

லேடி தில்லைநாயகம் ஒரு புஸ்தகத்தில் ஒரு ரசமான விஷயத்தைப் படித்துக் காட்டினாள். அதைக் கேட்டதும் பெண்மணிகள் ஒரு வரம்புக்குள் அடங்கிக் குடும்பத்தின் ஜோதி விளக்குகளாய் வாழவேண்டியது எவ்வளவு அவசியம் என்று எனக்குப் புலப்பட்டது.

ஒரு வயது பெண் குழந்தைகள் கூட ருதுவாகி யிருப்பதாக இங்கிலீஷ் டாக்டர்கள் 'ரிக்கார்டு' செய்திருக்கிறார்களாம். ஒரு வயது பெண் ருதுவாவது இயற்கைக்கு முரண்படுகிற படியால், இதைச் சூதக வியாதி என்று எடுத்திருக்கிறார்கள். ஒரு வயதில் ருதுவாகிறவளுக்கு வாரத்துக்கு ஒரு முறை, 15 நாளைக்கு ஒருமுறை, 22 நாளைக்கு ஒருமுறை, இப்படி தாறுமாறான காலத்தில் உதிரம் சிந்துவதுண்டு. 5, 6, வயது பெண்களும் இவ்வாறு ருதுவாகி மாதாமாதம் ஒழுங்காக ஸ்நானம் செய்வதும் உண்டு. இந்தமாதிரி கேஸுகளில் ருதுவாவது மட்டுமின்றி பெரியவளுக்குக் காணப்படும் எல்லா அங்க அமைப்புகளும் ஏற்பட்டுப்போவதாக டாக்டர்கள் சொல்லுகிறார்கள். இதற்குமேல் விளக்கமாக இதைப்பற்றி எழுதவேண்டியதில்லை. எட்டு வயது பெண் எவ்வித இடையூறுமின்றி சாந்திக்கு அருகதையாய் இருந்ததாகவும், ஒன்பது வயது பெண் பிரசவித்திருப்ப தாயும் ஆண்—பெண் ரகசிய (Sexualogy) நூற் புலவர்கள் ரிக்கார்டு செய்திருக்கிறார்கள். இவற்றைக் கேட்டபோது எனக்கு சொல்லமுடியாத விந்தையும் வியப்புமாய் இருந்தது. உனக்கும் அப்படித்தானிருக்கும் என்று நினைக்கிறேன். இந்த இளவயதில் ருதுவாகும் பெண்களைக் காபந்து செய்ய வேண்டுவது எவ்வளவு அவசியம் என்று நான் குறிப்பிட வேண்டியதில்லையல்லவா? பெண்மணிகளின் தேகக் கூறுக்குத் தகுந்தபடி செய்திருக்கும் இந்தியர்களின் பெண்தருமம் மிகவும் சிலாக்கியம் என்று இதிலிருந்து தெளிவாகும். சுதந்தரமாக வெளியே சுற்றுவதற்கு இந்தப் பெண்களை விட்டு விட்டால் பிஞ்சில் பழுத்து தம் வாழ்க்கையை வீணாக்கி விடுவார்கள்.

மேனாடுகளில் சிறுவயதில் ருதுவாகும் பெண்கள் கருத்தரியாமலிருக்க என்னென்னவோ ஆப்ரேஷன் சிகிச்சைகள் செய்துபார்த்து பிரயோசனமில்லை என்று விட்டு விட்டார்கள். இந்த மாதிரி பெண்களுக்கு ஆகாரத்தின் புஷ்டியைக் குறைத்து தூய சிந்தனைகள் வளரும்படியான மார்க்கத்தைத் தேடுவதைத் தவிர சிகிச்சை ஒன்றும் கிடையாது.

இதற்கு நேர் மாறான மற்றொரு விபரீத ருதுவுமிருக்கிறது. 16 வயதுக்குமேல் இருபது இருபத்தைந்து வயது வரையில் ருதுவாகாமல் இருப்பவர்கள் மிகவும் ஜாஸ்தி. இவர்களுக்கு புஷ்டியான ஆகாரங்களைக் கொடுத்து தேகாப்பியாசம் புரியும்படிச் செய்வதுதான் சிறந்த வைத்தியமாகும்.

கருப்பாசய அமைப்பு நிலைபுரண்டு கிடப்பதால் ரொம்பநாள் வரையில் ருதுவாகாமல் இருப்பவர்களுக்கு இங்கிலீஷ் வைத்தியர்கள் ரண சிகிச்சைமூலம் குணப்படுத்துவதாகத் தெரிகிறது. ஆனால், தமிழ் வைத்தியத்தில் ஆப்ரேஷன் சிகிச்சை இல்லாமலேயே இம்மாதிரி சூதக நோய்களைத் தவிர்ப்பதற்கு வேண்டிய வழிகள் இருப்பதாய்த் தெரிகிறது.

மற்றவை பின்னால்.

உனதன்புள்ள,

'நீலாம்பிகை.'

# சித்த வைத்தியத்தின் வலிமை.

டாக்டர் N. சுப்பிரமணியம், L. I. M.
(மெம்பர், சென்னை இந்திய வைத்திய சென்ட்ரல் போர்டு.)

அகத்தியன் முதலாவது ஆண்டுவிழாவை முன்னிட்டு எழுதியது.

(சென்ற மாதத் தொடர்ச்சி.)

அறம் முதலிய தமிழ் வேதங்களைத் தவிர வேறு அறமில்லை; (பொருள் மறையில் ஆயுள் மறை அடங்கும்) ஓதுவதற்குத் தக்க எல்லா அறங்களும் அதில் உள்ளன. ஆகவே வீண் தர்க்கத்தையும் வீண் வாதத்தையும் விட்டு சித்தர்கள் உளத்தில் ஊறிவந்த தமிழ்நான்மறைகளை ஓதி அறிஞராகி சந்தேக விபரீதம் நீங்கி சமாதானம் பெறுவீராக! பல அறிஞர் அவ்விதமே விடுற்றனர்.

வைத்தியம்:— வேதாகமங்களை உணர்ந்த அகத்தியர் பொதியையில் தங்கி ஆயுள் மறையை விரித்துரைத்தார். அது ஆயுருமறை, ஆயுள்மறை, ஆயுறுமரை எனவும் அறியப்படும். ஆயுருமறை என்பது, ஆய்-உரு-மறை என்ற முப்பதங்கள் சேர்ந்து, சோதி, துருவிப்பார் என்ற பொருளையுடைய ஆய், உடல் என்ற பொருள் வரும் உரு என்ற பதத்துடன் சேர்ந்து உடலைச் சோதித்து நன்னிலைப்படுத்தும் நூல் என்பது பொருளாகிறது. உள்ளத்தையும், அதனால் இயக்கப்படும் உடலையும் நன்கு ஆய்ந்து, பிணி இருப்பின் அவைகளை நீக்கி இனிது இயங்கும்படி செய்வதற்கான மறை ஆயுள் மறை. உறு—நன்மையாதல், நோய்ப்பட்டவனை ஆராய்ச்சியின் வலிமையால் நன்மையாம்படி செய்தல் என்பது ஆயுறுமறை என்பதன் பொருள். ஆயுள்மறை பொதுவாக வைத்தியம் என எல்லாராலும் அறியப்படுகிறது.

அகத்தியர் நமதுஉடலை தொண்ணூற்றாறு பதங்களாக விளக்கினார். அவை தொண்ணூற்றாறு கருவிகள் என்றும், தொண்ணூற்றாறு தத்துவங்கள் என்றும் கூறப்படும். அவைகளை நிலையில் வைத்தியக்கும் தொழிலே வைத்யம் எனப்படும். நோய்ப்பட்ட உடலில் தக்க மருந்தை வைத்தியக்கி நோய் நீங்கப்பெற்று உடல் தன் இயலில் இயங்கும்படி செய்வது என்பதும் பொருந்தும்.

வலிமை:— ஆற்றலைக்குறிக்கும். பிராணிகளில் சிங்கமே வலிமை மிக்கது. வலிமையை அதை உடைய பல பொருள்களையுங் கொண்டு அளந்தறிகிறோம். நமது வைத்திய முறையின் வலிமையை நன்குணர்ந்து கொண்ட மற்ற வலிமைகளைக் கேட்குந்தோறும் நாம் ஒப்பிட்டு அளந்து கொள்ள இயலும்.

## சித்தர் வலிமை

சித்தர் வலிமையை அவர்கள் இயற்றியுள்ள ஆயுருமறை, நாடி, காயகற்பம், இரசவாதம், மணிமந்திர மருந்து, யோகம், ஞானம் முதலிய பல விளக்கங்களிலிருந்து அறியலாம்; அறிந்து கொள்ளலாம். சித்தர்களது ஆயுருமறை நம் நாட்டுப் பழக்கவழக்கங்கள், காலவேறுபாடுகள், இயற்கை வளப்பங்கள் இவற்றிற்குத் தக்கபடி விளக்கப்பட்டிருக்கின்றன.

1. நாடி, உடலின் உயிர்த்துடிப்பை உணர்ந்து நோய்ப்படுதலைக் கணித்து அறிவதற்கு ஏற்ற நூல். இது சித்தர் நூலுக்கே சிறப்பானது. நாடி ஒன்றைக் கொண்டே நோயை நிதானிக்கக் கூடுமென்பதை நாடி நூல்களை முறையே அறிந்து கொள்பவர்களுக்குத்தான் தெரியும்.

2. காயகற்பம், என்பது உடல் வெகுநாள் நீடித்து நிலைத்திருப்பதற்கு ஏற்ற சாதனம். இரசவாதம் மணி மந்திர மருந்து, யோகம் இவைகள் சித்தர்களின் சாதனங்கள்.

3. ரசவாதம் உடலிலுள்ள கெடுதல்களை நீக்கி மனதைப் பொன்னாக்குவது. மனம் செம்பிற்கும், ரசம் விந்திற்கும் உவமை கூறப்படுகிறது. விந்தடக்கம் செய்வது அதாவது இரசத்தைக் கட்டுவதனால் உடல் மணிபோல ஒளி விடுகிறது. செம்பிற் களிம்பு நீங்குவது போல மனதில் மலம் நீங்கி அம்மனம் ஒளிவிடும். உடலிற்றங்கியிருப்பதையே பொன் செய்வது என்றும் இரசவாதம் என்றும் சித்தர்கள் கூறினார்கள். எப்பொருளை அறிவதற்கும் எச்செயலைச் செய்வதற்கும் நமது மனம், மொழி, மெய் மூன்றும் ஒன்றுபட்டாலன்றி வெற்றியடைய முடியாது. இம்மூன்றும் ஒன்றுவதற்கான சாதனங்களே மணிமந்திர மருந்தாகும்.

4 மணி:— மனம், மொழி, மெய்களில் மனதைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம். மொழியையும் மெய்யையும் ஒன்றுபடுத்துவது எளியது என்றே சொல்லலாம். ஒரு காலவரையரைக்குட்பட்டு ஓரிடத்திருந்து ஓரளவு எண்ணிக்கையுள்ள மந்திரத்தை அவசியம் உருச் செய்வதால் மொழியும் மெய்யும் ஒரு நிலைப்படுகின்றன. அதற்குச் சாதனம் மணி. அது எண்ணுவதற்கு உதவும்.

இவ்விதம் இரண்டும் ஒன்றுபட பல நாள் பழகி வருவதால் அடங்காது இஷ்டம்போல் சுற்றித்திரியும் மனதிற்கு, வேறு பற்றுக்கோடு ஒன்றுமின்றி ஒன்று சேர்ந்த மொழி மெய்யிடத்தே அடைக்கலம் புகுவதாகிறது.

மந்திரம்:— மூன்றும் ஒன்றுபடப் பழகியபின் மந்திரத்தாலான பலன் கிடைக்கிறது. சிவாயநம என்பது மந்திரம். இது சித்தர்கள் ஆழ்ந்து அறிந்து கண்ட உண்மை. ஒரு பெரிய ஆலமரம் அதன் சிறிய வித்துளடங்கியிருந்து வெளிப்படுமாறுபோல(Evolution & Involution) நினைக்கத் தக்க எல்லாப் பொருட்களும் இவ்வைந்தெழுத்துக்களிலடங்கி சிந்தை செல்லுமளவில் விரிந்து காட்டும்.

**சி**=சிவன் என்று இறைவனைக் குறிக்கும்;

**வா**=வாலை என்று அருளைக் குறிக்கும்;

**ய**=சப்த தாதுக்களால் கட்டப்பட்ட உடலையுடைய உயிர்களைக் குறிக்கும்;

**ந**=உயிர்களை மறைத்து வைக்கும் அறியாமையைக் குறிக்கும்;

**ம**=உயிர்களைப் பற்றிய ஆணவம், கன்மம், மாயையாகிய மலங்களைக் குறிக்கும்.

(தொடர்ச்சி 11-ம் பக்கம் பார்க்க)



# ஊர்க் காப்பு சங்கம்.

—:0:—

எல்லா இடங்களிலும் இப்பொழுது ஊர்க் காப்புச் சபைகள் ஏற்படுத்தி வருகிறார்கள். இந்த ஊர்க் காப்பு சபைகள் நெருக்கடியான காலத்தில் மிகவும் பிரயோசனமாய் இருக்கும் என்பது நிச்சயம். இந்தியாவை நோக்கியும் யுத்தம் நெருங்கி வருவதால் யாரும் அலக்ஷியமாய் இராமல் கக்ஷிபேதம், ஜாதிபேதம், மதபேத மின்றி ஒன்று சேர்ந்து உயிர் வாழ்க்கையின் க்ஷேமத்தின் பொருட்டுப் பாடுபட வேண்டுவது முக்கிய கடமையாகும்.

யுத்தகாலத்தில் நமது தேசம் இப்பொழுது இருக்கும் நிலைமையிலேயே இருக்குமென்று எதிர்பார்க்க வேண்டியதில்லை. யுத்தம் நிகழ்ந்திருக்கும் தேசங்களின் நிலைமையை ஆராய்ந்து அதன்பேரில் யூகித்துப் பார்ப்போமேயானால் ஊர்க்காப்புச் சபையின் அவசியம் தென்படுமே யல்லாது, இப்பொழுது நிலவியிருக்கும் அற்ப அமைதியை முன்வைத்துக் கொண்டு யோசித்தால் அதைப்பற்றிய சிரத்தை ஏற்படுவதற்கில்லை.

இந்த யுத்தத்தில் சரித்திரத்தில் காணப்படாத ஒரு நவீன முறை காணப்படுகிறது. நவீன இயந்திர சாதனங்களைப் பற்றி இங்கு குறிப்பிட வேண்டியதில்லை. இது ஒரு ஆச்சரியங்கூட அல்ல. எத்தனை நவீன உபகரணங்களுண்டோ, அத்தனை சாதனங்களையுங் கொண்டு குழந்தைகள், சிசுக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், மேதாவிகள், விஞ்ஞான நிபுணர்கள், கலைஞர்கள், தொழிலாளிகள், விவசாயிகள், முதலியோர் நிறைந்து உலகத்தின் உயிர் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் இன்றியமையாது விளங்கும் சமூகங்களை அழித்துவரும் கடினமான யுத்தமுறைதான் இந்த இருபதாம் நூற்றாண்டில் ஆச்சரியப்படக் கூடியதாய் இருக்கிறது. இந்த முறையை அனுசரிக்காமல் படைகளைப் படைகள் அழிக்கும் நியாயமான யுத்தமாய் இருந்தால் இவ்வளவு சீக்கிரமாக யுத்தம் முடிவுபெறாது. ஏனெனில், சேனைகள் பயிர்போலவும், பொதுஜனங்கள் தண்ணீர்போலவும் என்பது யோசிக்க விளங்கும். வயல்களில் நீர் பாயாமல் அணை போட்டுவிட்டால் பயிர்கள் தானே காய்ந்து கருகிப் போகும். அதைப்போல சேனைகளுக்கு உணவும் உடையும் உணர்ச்சியும் கொடுப்பது பொது ஜனங்கள். ஆங்காங்கு பொது ஜனங்கள் நிர்மூலமாகும்போது படையின் பலமும் தண்ணீரற்ற பசிய பயிர்போலுங் காய்ந்து கருகி உருக்குலைந்து போகிறது. ஊருக்குள் புகுந்த இப்படிப் பொதுஜனங்களையும் பெரிய கட்டிடங்களையும் நாசமாக்குவதின் மூலம் சேனைக்குப் பலங் குறைவதோடல்லாமல் போக்குவரத்து சாதனங்களையிழந்த பொதுமக்கள் தமக்குப் பிடிக்காத அரசாட்சியாய் இருந்தபோதிலுங்கூட அதற்குக் கீழ்படியும்படியான நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இந்த இரண்டு முறைகளுந்தான் ஹிட்லரின் ரகசிய ஆயுதங்கள். நாஜிகளின் வெற்றிக்கும் இந்த அநாகரிகமே அடிப்படையாக இருந்து வருகிறது. இவைகளை வைத்துக்கொண்டு நம்நாடு தாக்கப்படுமாயின் நாம் எத்தனை துன்பத்திற்கு ஆளாக வேண்டி யிருக்குமென்பதை யூகித்துப் பார்த்து அதற்குத் தக்கபடி சமாளிக்கும் சக்தியை அடையவேண்டும்.

சிங்கப்பூர், ஜாவா, ரங்கூன் முதலியவற்றை இழந்து விட்டதாலும், ஆஸ்திரேலியாவிலும் ஜப்பான் போர் முயற்சிசெய்து வருவதாலும் இந்தியாவின் பாதுகாப்புக்குப் பலஹீனமேற்பட்டிருக்கிறது. மடகாஸ்கர் ஜப்பானுக்கு அனுகூலமாய் நடந்து கொள்ளுமாயின், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கடல்மூலமாய் உதவி கிடைப்பது கஷ்டம்.

ரயில்வே, தந்தி, தபால், ரேடியோ, முதலிய ஸ்டேஷன்கள் எதிரிகளால் மற்ற இடங்களில் தாக்கப்பட்டதைப்போல இங்கும் தாக்கப்படலாம். இதனால் உள் கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்குக்கூட உணவுப்பொருட்களும் உற்பத்திப்பொருட்களும் கிடைக்காமல் அவதிப்படும்படி இருக்கும். இதன் பேரில் ஏற்படும் குழப்பம் மிகவும் சிக்கலுள்ளதாயிருக்கும். இதைச் சமாளிப்பதற்கு வரைதுறையான திட்டத்துடன் ஊர்க்காப்புச் சபைகள் வேலை செய்து வந்தாலொழிய சாத்தியப்படுமென்று தோன்றவில்லை. திகில்பட்ட ஜனங்களின் மனதைமாற்றி பல துர்க்கிருத்தியங்கள் நிகழ்த்துவதற்கு தீயவர்கள் முன்னெழுந்து நிற்பர். திருட்டு, கொள்ளை, கலகம் முதலியவைகள் எங்கும் துணிவாக நடத்தப்படலாம். பணக்காரர்களும் அவர்களை யடுத்து வாழும் அனைவரும் இவற்றிற்கு இலக்காகி ஹிம்சைப்படக் கூடும். வியாபார ஸ்தலங்கள் இவ்விதமான காரியங்களுக்கு உள்ளாகும்போது, வியாபாரிகளுக்கு பெருவாரியான நஷ்டம் விளைவதுடன் வாங்குவோராகிய பொது ஜனங்களும் உணவுப் பண்டங்களின்றித் திண்டாடுவார்கள். ஓரிடத்தில் நடக்கிற விஷயம் மற்றோரிடத்திற்குத் தெரியவராது. ஆங்காங்கு விமானத் தாக்குதல்கள்வேறு ஜனங்களின் கதியைக் கலக்கும். இவ்வாறு பணம் பண்டம், வீடு வாசல், பந்து ஜனங்கள் ஆகிய பல நஷ்டங்களையும் எதிர்பார்த்து மனோதிடத்துடன் எதிர்த்து நிற்கவேண்டும். எல்லா மக்களும் ஐக்ய பாவத்துடன் ஒன்று சேர்ந்து உறுதியாக உழைக்க ஒரு பட்டாலன்றி ஊர்க்காப்பு சபைகள் திருப்திகரமாய் வேலை செய்ய முடியாது.

யோக்கியப் பொறுப்புடன் தன்னலங்கருதாது பிறர் நன்மைக்குச் சேவை செய்யக் கூடிய இளைஞர்கள் இப்பொழுது முன்வர வேண்டும். ஜனங்களுக்கு நேரும் தீங்குகளைத்தடுத்துக் காப்பாற்றும் கண்களுடன் இரவு பகலாக வேலைசெய்து வரவேண்டும். ஆபத்துக் காலத்தில் துணிச்சல் ஒன்றுதான் நமது தோழனாக நின்று உதவும். சமூகத்துக்கு பலவிதத்திலும் இடைஞ்சல் புரிந்துவரும். அயோக்கியர்களையும், காலிகளையும் ஒடுக்கி வைக்கும் உபாயங்களைத்தேட வேண்டும். தன் கையே தனக்குதவி யென்னும் பழமொழிக்கிணங்க அந்தந்த ஊரில்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க.)

# இலகு வைத்தியப் பகுதி.

ஸ்ரீமதி K. சுந்தரத்தம்மாள், R. I. M., M. C., திருவாரூர்.

## பதார்த்த குணம்.

ஆனைத்திப்பிலி சந்நிபாதத்தை சம்ஹரிக்கும். அதிமதுரம் இருமல் கபாதிக்யத்தைச் சாந்தி செய்யும். அரத்தை அஸ்தி சுரத்தையும் சுவாச காசத்தையும் சொஸ்தம் செய்யும். கடுகுரோகணி மலச்சிக்கலைப் போக்கும். இஞ்சி ஜீரண சக்திக்கும் இரத்த பித்த சௌக்யத்திற்கும் எடுத்த மருந்து. ஏலம் சொரி தினவைப் போக்கும்.

கடுகு சூலை நோயைத் தவிர்க்கும். விரளிமஞ்சள் ஜன்னி சீதளத்தைத் தடுக்கும். செவியம் மேக கரப்பான் விஷரணம் முதலியவற்றை சவுக்கியம் செய்யும். கருஞ்சீரகம் விஷக்கிருமிகளையும் சூதகச் சிக்கலையுஞ் சரிபண்ணும். சூடன் சீதவாதத்துக்கு நல்லது. கஸ்தூரி மஞ்சள் நீர்க்கோவை தலை நோய், தலைபாரம் முதலியவற்றுக்கு நல்ல மருந்து. காயம் குடல் வாயுவைப் போக்கி பசி தீபனத்தையுண்டுபண்ணும். கார்போக விதை விஷமேகம் குட்டம் மேகநீர் சொரி முதலியவைகளுக்கு ஏற்ற ஔஷதம். கிச்சிலிக்கிழங்கு தலைநோயைத் தவிர்க்கும். கிராம்பு கபம் கோழை சுரம் ஜன்னி அதிசாரம் முதலியவைகளைக் குணப்படுத்தும். குக்கிலுக்கு கீல் வாதம் சூலையும் போகும். குங்குமப்பூ சீதவாதத்துக்கு ரொம்ப நல்லது. குந்திரிக்கம் தலைநோய் பீனிசநோய் நீக்கும். கொறுக்காய்ப்புளி அரோசிகம் அஜீரணம் தீர்க்கும். கோஷ்டத்திற்கு தாபம் கபவாதம் நீங்கும்.

கோரோசனை உடல் இரணத்தை ஆற்றும். சடாமாஞ்சில் மேக ரோகத்தை நீக்கும். ஜாதிக்காய் தாதுவிருத்தி செய்யும். சதகுப்பை உதிரவாதத்தைக் கண்டிக்கும். சந்தனம் உஷ்ணத்தைத் தணித்து மேக வெட்டையைச் சிறிது குணப்படுத்தும். கொடிவேலி கபவாத சுரத்தைக் கேட்கும். சிறுதேக்கு க[illegible]வாத சுரத்துக்கு எடுத்த மருந்து. செவ்வரளி சுவாச நோய்க்கு நல்லது. சேங்கொட்டை கடி விஷ மேகங்களைத் தவிர்க்கும். (வைத்தியரின் உதவியில்லாமல் உபயோகம் செய்யலாகாது.) தாளிசபத்திரி கபத்தையறுக்கும், ஈளை காசம் இருமல் இவைகள் தீரும். வாலுளுவை குஷ்டத்தை உதிர்க்கும், தான்றிக்காய் சுவாசகாசத்தை நீக்கும். தனஞ்சயனை எழுப்பும். வெண்கடுகில் திமிர் குஷ்டம் தீரும். வெந்தயம் வேக்காடு தணித்து உடம்பை தழைத்து வளரச் செய்யும். காட்டுச் சீரகம் வாய் விளங்கம் இவைகளில் கிருமிகள் மடியும்.

அத்தியில் பெரும்பாடு மதுமேகந் தீரும். அரசு குட்டத்தைப் போக்கும். புத்தியைத் தெளிவுபடுத்தும். அமுக்கிரா கபவாதம் நீக்கும் தேகம் பலந்தரும். ஆடாதொடை கபம், சுவாசகாசம் நீக்கும். ஆதண்டை பீனிசத்தைப் போக்கும். பொன்னுவரை மேகப்படைகள் நீக்கும். இலவம் பிசின் சுக்கிலத்தைக் கட்டும். காட்டாத்தி அதிசாரம் கிராணி நீக்கும். கோவைசலக்கழிச்சலைப் போக்கும். காட்டுத்துளசி இரைப்பை நிறுத்தும். சடைச்சிமூலி விரியன் விஷத்துக்கு நல்லது. கோடகசாலை வயிற்றுக் கோளாறுகளுக்குத்தேவலை. உதிரப்பெருக்கு நிறுத்தும். சாரணை வாத கப தோஷத்தையும் திமிர்வாதத்தையும் போக்கும். சீந்தில் காயசித்தியாம்; தேகத்திலுண்டான சகல விஷங்களையும் நீக்கும் சிவனார்வேம்பு விஷகடி விஷமேக குட்டமும் நீக்கும். வரிக்குமட்டி குன்மம் உதிர குன்மமும் நீக்கும். நிலவேம்பு சகல சுர நோய்களுக்கும் நல்லது.

## மருந்து செய்யினங்கள்.

தினைப்புல் சிலையைக் கட்டும். தேவதாளி சூதத்தைப் பற்பமாக்கும். செவ்வகத்தி லிங்கத்தைக் கட்டும். இனிப்புக்கோவை ரசத்தைக் கட்டும். தாம்பிரச் சிகை இரச்சத்தைக் கட்டும். முருங்கை நாகத்தைக் கட்டும். அப்பை வீரத்தைக் கட்டும். புளியாரை வீரத்தைக் கட்டும். பிரண்டை வைரத்தை நீற்றும். பிர்மதண்டு ரசத்தையும் பூரத்தையும் கட்டும். கடம்பு பாஷாணத்தைக் கட்டும். பேய்க்குமட்டிலிங்கத்தையும் பாஷாணத்தையும் கட்டும். பொன்னுவரை வங்கத்தை செந்தூரம் செய்யும். மருது வங்கத்தையும் நாகத்தையும் கட்டும். வெண்கருங்காலி நாகத்தை மணியாய்க் கட்டும். வெள்ளெருக்கு சாரத்தைக் கட்டும். வெள்ளை நீர்முள்ளி செம்பை பஸ்மமாக்கும். வெண்கடம்பு இரசத்தைக் கட்டும். வெள்ளைக் கிலுகிலுப்பை இரசத்தை பற்பமாக்கும். வெள்ளலரி லிங்கத்தை மெழுகாக்கும். வெண்தாமரை இரசத்தைக் கட்டும்.


### சந்தா விகிதம்.

| | |
|---|---|
| ஆயுள் சந்தா | ரூ. 25—0—0 |
| உள்நாடு ஒரு வருடம் | 1—0—0 |
| வெளிநாடு ஒரு வருடம் | 2—0—0 |
| தனிப்பிரதி | 0—1—6 |

### விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| வெளியட்டை (ஒரு தடவை) | ரூ. 25—0—0 |
| உள் அட்டை ,, | 20—0—0 |
| அரைப் பக்கம் ,, | 10—0—0 |
| கால் பக்கம் ,, | 5—0—0 |

தொடர்ந்து விளம்பரஞ் செய்ய விரும்புவோர்களுக்குத் தனி விகிதம் தரப்படும்.

மானேஜர்,

**அகஸ்தியன் ஆபீஸ்,**

திருத்துறைப்பூண்டி.


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ள இளைஞர்கள் தம் எல்லையைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே, சகல ஜனங்களும் எந்த முகாந்திரத்தையுங் கொண்டு சச்சரவு செய்து கொள்ளாமல் ஒன்றுகூடி ஊர்க்காப்பு சபைகள் நிறுவி ஜனசமூகத்தின் க்ஷேமாபிவிருத்திக்கும் அமைதிக்கும் பாடுபடும்படிக் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர் கதை.

# உதயசங்கரன்
## அல்லது
# அமராவதி இளவரசன்.

நாகை என். பாலசுப்ரமண்யம்.

பதிப்புரிமை கதாசிரியனுடையது.

(Copyright to the Author of this Novel)

### 4. இரவின் கொடுமை.

அன்றிரவு இளவரசருக்கு நித்திரை பிடிக்கவில்லை. அகக் கண்களுக்கு அதிகாரம் ஜாஸ்தியாகப் போய்விட்டது. இப்படித் திரும்பினால் அவள்! அப்படித் திரும்பினாலும் அவள்தான்! கண்களை கசக்கி நெறித்துவிட்டாலும் அவளுடைய அழகின் உருவம் ஜோதிமயமாகத் தோன்றுகிறது! புன்னகை பூக்கிறாள்! நாணி இடையை நெகிழவிட்டு வளைந்து நிற்கிறாள்! கண்களை அப்படியும் இப்படியும் உருட்டி இவ்வுலகத்தை வசீகரித்துவிடும் மோகனாங்கார ஜாலமந்திரங்களை யெல்லாம் செய்கிறாள்! அதோ அந்தத் தூணில்! கொசுவலைக்குப் பின்புறம்!! அலமாரிக்கும் பக்கத்தில்!!! எங்கு பார்த்தாலும் அவளுடைய இளவடிவம்! கண்களில் இளவரசருக்கு நம்பிக்கை குறைந்து போய்விட்டது. "ஹா! என்ன எனது கண்களின் மடல்கள் மடித்து உதிர்ந்துவிட்டனவோ? கதவுகளைப் போல மூடிக்கொண்டு காண்பவைகளை மறைக்கும் இமைகள் இருந்தும் அவள் பொன்னுருவம் மறைவதைக் காணோமே! ஓ!...... ஆம். அகக்கண்கள் என்று சொல்லுகிறார்களே அதுவோ. அகக்கண்களுக்கு மூடிகள் இல்லையோ! வேண்டாமே ஈசுவரா! மூடித்திறக்க முடியாத நிரந்தரமான விழிகள் வேண்டியதில்லை. மூடிக்கொண்டு அவள் உருவத்தைப் பார்க்கா விட்டால், அவளால் விளையுந் தொந்திரவும் குறையுமன்றோ?" என்று உதயசங்கரர் உள்ளுக்குள் சொல் சொல்லிக் கொண்டு உடம்பை முறித்து நெட்டி வாங்கினார். மஞ்சத்தை விட்டுக் கீழ் இறங்கினார்; ஒரு சுற்று சுற்றி எங்கும் கண்ணோட்டம் செய்தார். கைகளைப் பிசைந்து கொண்டு அலமாரியின் ஓரமாகப் போய் நின்றார். முப்பது வால்டு விளக்கின் ஸ்விச்சை தட்டிவிட்டு ஒரு முழி முழித்தார். வரிசை வரிசையாக மாட்டப் பெற்றிருந்த ரவிவர்மாவின் அழகிய சித்திரங்களை யெல்லாம் முறைத்துப் பார்த்தார். ஒன்றிலும் அந்த வெறி கொண்ட மனம் அடங்கவே இல்லை. மனத்தின் சக்தி முழுமையும் பானுமதியிடம் விரைந்து சென்று கொண்டிருந்தபடியால் இதர வஸ்துக்களில் அவர் மனம் சலித்து விரக்தியடைந்தது.

"என்ன அழகு வேண்டியிருக்கிறது! பெரிய கற்பனைக்கார சித்திரிகன் எழுதிய பெண் உருவம்! அஷ்ட அவலக்ஷணங்களையும் எப்படித்தான் எழுதினானோ பிரகஸ்பதி! இந்த அபஸ்மாரமான படங்களை என் எழுத வேண்டும்? பானுமதி பிறந்த அழகு ஜாதியை அவமானப் படுத்தவா? பட்டினத்தடிகளின் சிஷ்யனோ? அப்படியிருந்தால் கோவணத்தைக் கட்டிக் கொண்டு தெருத் தெருவாய்ப் பாட்டுப் பாடிக் கொண்டு அலைகிறது தானே? உலகத்தின் ஜீவ ஜாதியைப் பழிப்பதற்கா இந்தச் சித்திரக்கலை! சே!" என்று சித்திரக்கலையின் அரசனைப் பலவாறு ஏசிக் கொண்டு நின்றார்.

ஜன்னல் திறந்து கிடந்தது; ஜோதிவிலாசத்தின் ஆனந்தச்சோலையிலிருந்து தென்றல் சிலுசிலுவென்று மிருதுவாக வீசிக் கொண்டிருந்தது. பூர்வ பக்ஷத்து தசமியல்லவா? சந்திரனின் ஒளி தண்ணென்று எங்கும் பிரகாசித்தது. உதயசங்கரர் கதவைத் திறந்து கொண்டு மாடித்தளத்துக்கு வந்து நின்றார். அரசலாற்றங்கரை வரையில் படர்ந்து செல்லும் ஆனந்தச் சோலையைக் கனித்த வண்ணமாய் ஏதோ எண்ணமிட்டார். அண்ணாந்து பார்த்தார்; அவரது வெப்பத்தைத் தணிக்கமாட்டாத சந்திரனின் குளிர்ச்சிக்கு ஒரு சாபங் கொடுத்துவிட்டுத் தளத்தின் எல்லை பூராவும் அங்கும் இங்கும் அலைந்தார். மூக்கின்மீது விரலை வைத்துக் கொண்டு அசைவற்று நின்றார்.

"கண்களுக்குத் தெரியாமல் மறைந்து நின்று வருத்தும் கொடுங்கோல்! இரவுகாலத்தில் அதிகாரம் படைத்த காதகன்! காதல் உலகத்துக்கு இறைவன் என்று சொல்லப்படும் காமவேள்! மந்த மாருதம், மலர்களின் இனிய மணம் முதலிய மென்மையான ஆயுதங்களைக் கொண்டு கர்ண கொடூரமாகத் தாக்கி ஹிம்சைகளைப் புரியும் கிராதக அரசன்! அடே பாபி மன்மதா! போதும்! போதும்!! உனது அட்டகாசங்களை நிறுத்து!" என்று மனதுக்குள் சொல்லிக் கொண்டு விசுப்பல்கையில் உட்கார்ந்தார். படுத்தார்; எழுந்திருந்தார்; இப்படியாக காதலின் உத்வேகத்தினால் உந்தப்பட்டு சித்தங் கலங்கியவராய் பலவித அவஸ்தைகளுக்குள்ளாயினார்.

பானுமதியின் ஜாதி குலம் அந்தஸ்து ஆகிய ஒன்றும் அவர் கவனத்துக்கு வரவில்லை. தன் ஜாதி தன் குலம் தனது அந்தஸ்து ஆகிய எல்லாவற்றிலும் பானுமதி உயர்ந்தவள் என்று அவர் கருதினார். 'அவள் காதலிக்கிறாளா இல்லையா' என்னும் சந்தேகம் அவர் மனதை ஊடுருவித் துளைத்துக் கொண்டிருந்தது. "ஒரு வார்த்தை பேசமாட்டாளா? அன்பு கனிய ஒரு நிமிஷமாவது கண்ணெடுத்துப் பார்க்கமாட்டாளா? என் மனதிலுள்ள காதலையாவது தெரிந்து கொண்டதாய் சமிக்ஞை செய்யமாட்டாளா?" என்று அவர் மனம் ஆயாசப்பட்டுக்கொண்டிருந்தது.

வேகம் அதிகரித்தால் தூரமும் அதிகரிக்கும். என்பது அவர் விஷயத்தில் நன்றாகப் புலனாயிற்று. காலம் நாள் ஒன்றுக்கு இருபத்து நான்கு மணி நேரமாகக் கழிந்துகொண்டிருக்கிறது. அன்றிரவும் அதன் இயல்புக்குத் தக்கபடியேதான் கழிந்துகொண்டிருந்தது. உதயசங்கரரின் மனத்தின்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)

# மந்திர சக்தி

பிரான்ஸ் ஹார்ட்மன், M.D., அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியது.

(நா. ந. பா. மொழிபெயர்ப்பு.)

உணர்ச்சிகளின் ஆதிக்கியத்தை அணுகவிடாமல் அடக்கியாளும் சக்தியற்றவர்கள் அவற்றால் ஆட்டி அசைத்து உருட்டப்படும் தஞ்சாவூர் பொம்மைகளைப்போன்றவர்கள். தமக்கென்று எவ்வித சுதந்தரமுமற்று சூத்திரக் கயிற்றுக்கு உடன்பாடாக நிற்கும் உயிரற்ற பாவைகளைப் போன்று வாழுகிறார்கள். தாம் நினைக்கின்றபடி வாழமுடியாமல், உணர்ச்சிகளின் விருப்பத்திற் கெல்லாம் கீழ்ப்படியும் கேவலமான அடிமைகள் என்றுகூடச் சொல்லலாம். கோபம் தாபம் ஆத்திரம் எனப் பலவகைப்படும் உணர்ச்சிகளுக்கு உட்படாமல் அடக்கியாளும் சக்தியைப் பெற்ற மனிதர்கள், தம் இஷ்டப்படி நல்ல காரியத்தின் பொருட்டோ அல்லது கெட்ட காரியத்தின் பொருட்டோ மேற்படி சக்தியைப் பிரயோஜனப் படுத்திக்கொள்ள முடியும். துஷ்ட காரியங்களை முன் முன்னிட்டுத் தன் மந்திர சக்தியைப் பயன் படுத்துகிறவன் சூனிய மந்திரவாதி (Black Magician) என்று சொல்லப்படுவான். உலகத்தின் நன்மையை உத்தேசித்து எவனொருவன் தனது ஆன்ம பலத்தை உபயோகிக்கிறானோ, அவன் பூரண மந்திரவாதி (White Magician) என்று பெயர் பெறுவான்.

மேனாட்டிலும் சரி, கீழ்நாட்டிலும் சரி, தமது மனோசக்தியைக் கொண்டு சாதாரண மனிதர்கள் செய்ய மாட்டாத சில வேடிக்கை விநோதங்களைச் செய்து வருகிறார்கள். ஆஸ்திரேலியாவிலிருந்து ஆப்பிள் பழம் வரவழைத்து சாப்பிடுவது; இந்தியாவில் தன் சிநேகிதன் என்ன செய்கிறான் என்பதை இங்கிலாந்தில் இருப்பவன் சொல்வது. உயிரற்ற பொம்மைகளை உயிருள்ளவைபோல் நடத்துவது. இவைகளைப் போன்ற சில ஆச்சரியமான காரியங்களைச் செய்கிற மந்திரவாதிகள் புலன்பொறிகளை வென்றதின் நிமித்தமாக மேற்கண்ட திறமைகளைப் பெற்று, விலங்குதரத்திலுள்ள மனிதர்களிலும் கொஞ்சம் மேன்மை யடைந்திருப்பது வாஸ்தவந்தான். ஆனால், இவர்கள் தம் சக்தியினால் இத்தனை அதிசயங்களையும் செய்து வருவதாக நினைப்பதால் தாம் சுயவுணர்வற்ற அஞ்ஞான திருஷ்டியைப் பெறுகின்றனர். ஆகவே வஸ்து விவேகமற்று சத்துவகுண அகங்கார சாயலுடையவராய் பிர்மஞான திருஷ்டிக்கு வெகுதூரத்தில் நின்றுவிடுகிறார்கள். இயற்கையாகிய பராசக்தி மந்திரவாதியின் சரீரத்தை ஒரு கருவியாகக்கொண்டு எண்ணிறந்த திருவிளையாட்டுகளைப் புரிந்து வருகிறது. இந்த உண்மையான மந்திரவாதியை அறிந்து கொள்வதே விவேகம். ஏனெனில், மந்திரவாதிக்கு பல விநோதங்கள் செய்யும் ஆற்றல் எப்படி வந்தது? யாரால் வந்தது என்னும் விவரத்தை அறிந்து கொண்டவனே பிரக்ஞையுள்ள மந்திரவாதியாவான்!

உயிர் நமக்குச் சொந்தமல்ல; அதனை நாம் நமது ஆக்ஞைக்கு உட்படுத்தவும் சாத்தியமில்லை. பரமான்மாவின் விருப்பத்திற்கிசைய நமது சரீரம் பயன்பட்டு வருகிறது. நமக்கென்று ஒரு சக்தியும் இல்லை. 'ஆட்டுவித்தால் யாரொருவர் ஆடாதாரே!' என்ற ஞானம் வரும்பொழுது பசுநிலையும் பதிநிலையும் தோன்றும். தனது நிலையின் எளிமை வியக்தமாகுங் காலத்தில் பதியின் நிகரற்ற நிலையும் தெளிவாகும்.

'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்று பிர்மதிருஷ்டி பெற்ற பெரியோர்கள் சொல்லிய வுண்மையும் தெற்றென விளங்கும். தன்னைத் தெரிந்தவன் ஒருவனே தலைவனையும் தெரியக்கூடும். இருவஸ்துக்களையும் உணர்ந்த ஞானி தனக்கும் தலைவனுக்குமுள்ள வேற்றுமைகளையும் உணர்வான்.

"இல்லை இல்லை என்னினொன்றும்
இல்லாததல்ல
என்றுமுள்ள இயற்கையதாகிச்
சொல்லரிய தன்மையதாய் யான்தான்
என்னத் தோன்றாததெல்லாம்
விழுங்கும் சொரூபமாகி"

அகண்டாகார பரவெளியாக விளங்கும் ஏக வஸ்துவின் நிகரற்ற நிலைமை விளக்கமாகும். இந்த இயற்கைப் பராசக்தியைத்தான் மக்கள் கடவுள் என்று அஞ்ஞானக் கரையிலிருந்தும் துதிசெய்து வருகின்றனர்.

அஞ்ஞானம் என்பது அறிவற்ற மடநிலை; அதற்குமாயாஜெகம்; இருள்; தாமசம் என்று பல பெயர்களுண்டு.

கண்களுக்கும் காணப்படும் வஸ்துக்களுக்கும் இடையிலே இருள் குறுக்கிட்டு மறைப்பதைப் போல, பசுநிலைக்கும் பதிநிலைக்குமிடையிலே பாசநிலை குறுக்கிட்டு இருநிலைகளும் தோன்றாமல் மறைத்துவிடுகிறது. இந்த நிலையே அஞ்ஞான மிருகநிலை என்று சொல்லப்படுகிறது. எனவே, மனிதன் இந்த மிருக நிலையிலேயே மந்திரவாதியாவது சிறப்புடையதன்று. அவன் லக்ஷிய மந்திரவாதியுமல்ல. பாசநிலையைக் களைந்து அவன் திருவடியும் நம் திருமுடியும் வேறு வேறு என்ற விகற்பம் ஒழிந்த நிலையே இன்பநிலை. அப்பொழுது மனிதன் அட்டமாசித்திகளும் கைவல்யமாகக் கூடிய சித்தர்நிலை முனிவர்நிலையையெய்தி ஒப்புயர்வற்ற பூரண மந்திரவாதியாகிறான். பிர்மவித்து பிருமவரன் என்னும் பலபடிகளைக் கடந்து செல்லும் மார்க்கத்தையும் அவன் அடையக்கூடும்!

மனிதர் தேகவலிமை ஆன்ம வலிமை என இரண்டுவித வலிமைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஒரு மனிதனை நேசிக்கிறோம்; கௌரவிக்கிறோம் அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் செய்கிறோம். ஒருவன் மலையைப் போன்ற பெரிய சரீரத்தைப் பெற்றிருப்பினும் புத்தி சாதுர்யமும் நல்லொழுக்கமுமுடைய மெலிந்த ஆகிருதியுடையவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறான். அத்தகைய மனிதனுக்கு அவன் கீழ்ப்படியவேண்டுமென்னும் உணர்ச்சி அவனுக்கு தெரியாமலேயே அவனிடம் ஏற்படுகிறது. இதைத்தான் மந்திர சக்தியென்று சொல்லுகிறார்கள். தேகவலிமையைக் காட்டிலும் ஆன்ம வலிமையே உயர்ந்ததென்பது இதனால் தெரியவரும்.

(இன்னும் வரும்.)

# சித்த வைத்தியம்.

துடிசைக்கிழார் அ. சிதம்பர முதலியார் அவர்கள்.

சித்த வைத்தியம் என்பது தமிழ் நாட்டில் பண்டைக்காலத்தில் (இன்ன காலம் என்று நிர்ணயிக்க முடியாத காலந்தொட்டு) தமிழ்நாட்டு அறிஞர் (சித்தர்) களால் உண்டாக்கப்பட்ட மருத்துவ முறையாகும்.

மருந்து என்ற சொல்லுக்கு மூன்றுவிதமான பொருள்கள் உள. அவையாவன:- (1) மூலிகை (2) பரிகாரம் (3) மருத்துவம். இவைகளை ஆங்கிலத்தில் Physics Surgeory, Midwifery எனக் கூறுவர்.

இம்மூன்று பொருள்களும் உள என்பதை சங்கநூல்கள் பயின்று உள்ளார்க்கு விசதமாம். இதனுனே, கடைச்சங்கத்தின் கடைசியில் இருந்தவரான திருவள்ளுவர் தம்முடைய திருக்குறளில் மருந்து என்ற பெயரானே ஓர் அதிகாரம் வகுத்துள்ளார் என்பது கண்கூடாம்.

மூலிகை என்பது மருந்து, கசாயம்-சூரணம்-சாறு-பால் முதலியன இப்பகுதியில் அடங்கலாம்.

பரிகாரம் என்பது பரிகரி என்னும் சொல்லினின்றும் பிறந்தது. பரிகரி என்ருல் அறு என்று பொருள். பரிகரிப்பவன் பரிகாரி (Surgeon) இத்தொழில் சிலகாலம் பொதுவாக இருந்து, பின் பரம்பரையாய் வர, அது ஒரு கூட்டத்தாரைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது.

மருத்துவம் என்பது பிரசவ சிகிச்சையைக் குறிக்கும். மருத்துவச்சி என்பது Midwife என்னும் ஆங்கிலப் பெயருக்குச் சமம். இத்தொழிலும் முதலில் பொதுவாக இருந்து, பின் பரம்பரையாய் வர ஒரு கூட்டத்தாரை சேர்ந்ததாய் விட்டது.

அறிஞர்கள் என்பார் சரியை—கிரியை—யோகம் பயின்று, அந்த யோகக் காட்சியால் உலகின்கண் உள்ள பொருள்களின் உண்மை இயல்புகளை உணர்ந்து, அவற்றை மன்பதைகளுக்குப் பயன்படுத்தும் முறைகளை அறிந்து, உலகர்க்கு அப்பலன்களைத் துய்க்கும்படி செய்தவர்கள் ஆவார்கள்.

அத்தகைய அறிஞர்கள் என்ற சித்தர்கள் ஆதிமொழியாகிய தமிழ்மொழியில் மருத்துவ நூல், மந்திர நூல், இரசவாத நூல், யோக நூல், ஞான நூல், பதரார்த்தங்களின் குண நூல், முதலியன எழுதி உலகுக்கு உபகரித்துள்ளார்கள்.

இச்சித்தர் முறையாகிய தமிழ் மருத்துவ முறையே ஆதிமுறை. இப்போது உலகில் பயின்றுவரும் எல்லா முறைகளுக்கும் தாய். இம்முறையினின்றும ஏனைய முறைகள் பிரிந்தவாறும், அவைகளின் காலவரையரையும் அவ்வம் முறைகளிலுள்ள நூல்களின் வரலாறும் நான் எழுதி வெளிப்படுத்தியுள்ள "மருத்துவநூல் வரலாறு" என்னும் புத்தகத்தில் காண்பீர்களாக.

தமிழ் நாட்டில் முதல் இடை, கடைச்சங்கங்களில் 4449-449-49 என வரையறுக்கப்பட்ட எண்ணிக்கை யுள்ள புலவர்கள் இருந்தார்கள் என்று கேட்கப்படுவதுபோல், சித்த வைத்திய முறையிலும் ஒரு சங்கம் இருந்தது. அதன் அங்கத்தினர் பதினெண்மர் ஆவர். அவ்வெண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டால் அதனை உடனே வேறொரு அங்கத்தினரை நியமித்து நிறைவு செய்து கொள்ளுவது வழக்கம்.

இதேமாதிரி கன்னடநாட்டில் ஒரு சித்தர் சங்கம் உண்டு. அச்சங்கத்திற்கு இராஜேசுர தரிசனக் கூட்டம் என்ற மறு பெயரும் உண்டு.

தமிழ் நாட்டுச் சித்தர்கள் "முப்பு" என்பதனைக் கருவியாகக் கொண்டவர்கள். கன்னடநாட்டுச் சித்தர்கள் பெண்ணின் சூதத் (இரஜஸ்) தைக் கருவியாகக் கொண்டவர்கள். அவர்களின் தொகை ஒன்பது. அதனுல், அவர்களுக்கு "நவநாத சித்தர்கள்" என்று பெயர். "நவகோடி சித்தர்கள்" என்றும் கூறுப. நவகோடி என்பது ஒன்பது என்னும் தொகையை வரையாக (கோடி=எல்லை — வரையாகக் கொண்டது சூதம்=பாதரசம்-பூநீர்) நவநாதசித்தர்களின் பலர் வீரசைவத் தலைவராய் உள்ளவர். அல்லமதேவர் அவர்களில் ஒருவர்.

இந்துக்களாகிய ஆரியர்கள் நாடாகிய இந்துஸ்தானத்திலும் (Between Vindhya and Himalaya) ஒரு வைத்திய சங்கம் உண்டு அவர்கள்தான் தமிழ்நாட்டுச் சித்த வைத்தியத்தின் உதவியினுல் அவர்கள் நாட்டுக்குத் தக்க "ஆயுர்வேதம்" என்ற முறையை ஏற்படுத்தியவர்.

இம்மாதிரிச் சங்கங்கள் பிறநாடுகளிலும் உண்டு.

காமிக ஆகமத்தில் நீராட்டுப் படலத்தில் பதினேண் சித்தர்களைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிற தென்ருல் தமிழ் பதினெண் சித்தர்களின் காலம் எப்போது என்று கணக்கிடுவது?

இனி, பதினெண் சித்தர்கள் இன்னுரெனக் கூறுவேனுக.

சித்தர்நூல்களில் கூறியவண்ணமும் அபிதான சிந்தாமணியில் கூறிய வண்ணமும், உலகில் வழக்கத்தில் உள்ளபடியும் பார்ப்போமானுல் பதிணென் சித்தர்களின் பெயர்கள் சில மாறுபட்டு வருவதையும், புதுப் பெயர்கள் அவ்வப்போது இணைக்கப்படுவதையும் பார்க்கலாம். இதற்குக் காரணம் மேலே கூறியுள்ளதே ஆகும்.

(தொடரும்)


## ஏஜண்டுகள் தேவை.

:0:

எல்லா இடங்களிலும் அகஸ்தியனை விற்பனை செய்வதற்கு ஏஜண்டுகள் தேவை! தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்! விபரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,

அகஸ்தியன் ஆபீஸ்,

திருத்துறைப்பூண்டி.

வியாபார விருத்திக்குச் சிறந்த நண்பன்

'அகஸ்தியன்'

## "உதயசங்கரன்."

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேகம் மேற்படி இரவின் போக்கை மந்தப் படுத்தி தூரத்தை அதிகரித்து விட்டது. அந்த இரவும் அவருடைய மனோ வேகத்துக்கு ஒத்துச் செல்வது சாத்யமானாலோ, நமக்கெல்லாம் ஒரு செக்ண்டில் பொழுது விடிந்து சூரியன் கிழக்கே உதயமாகி யிருக்க வேண்டும். ஆனால், நம் கதாநாயகனுக்கு ஒரு சாதாரண இரவு நான்கு சதுர் யுகங்கள் கழிவதைப்போல கழிந்து கொண்டிருந்தது. இவ்வாறாக உதயசங்கர முதலியார் அன்றிரவை சொல்லவொண்ணாத கஷ்டத்துடன் கழித்தார்.

### 5. ஆனந்தச் சோலை.

மறுநாள் அவருடைய முகம் வாடி வதங்கி சோபையற்று விளங்கிற்று. தனபால முதலியார் சுந்தரத் தண்ணி திலகவதி முதலிய ஒருவரிடத்திலும் மனம்விட்டுப் பேசமுடியாதவராய் தனிமையான அறையில் குரு விசாரம் பிடித்துச் சாய்ந்துகிடந்தார்.

'காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி மாலையரும்பு மிந்நோய்' என்று திருவள்ளுவர் சொல்லியவண்ணம் காதல் அரும்புகின்ற மாலைநேரம் உதயசங்காருக்கு ஒரு நோயைப் போலச் சம்பவித்தது. காப்பி சாப்பிட்ட பிறகு மாலை ஐந்து மணிக்கு ஆனந்தச் சோலைக்குள் சென்று நெறி தப்பி நிற்கும் தன் மனதை ஒரு நிலைப் படுத்துவதற்கு முயன்று கொண்டிருந்தார்.

முல்லை, சம்பங்கி, ரோஜா முதலிய புதுமலர்களின் நறுமணம் கம்மென்று வாசித்துக் கொண்டிருந்தது. தாமரை படர்ந்த சிறிய தடாகத்தில் அன்னப்பறவைகள் கூடிக் குலாவி நீந்திக் கொண்டிருந்தன. வன்ன ஜாலங்களைப் பொருந்திய பசிய மயில்கள் தம் சிறகை விரித்து ஜம்பை தாளத்துக்கு தகுந்தபடி ஆனந்த நிர்த்தனம் புரிந்து கொண்டிருந்தன. மான்கள் ஒன்றிரண்டு மிரண்டு மிரண்டு துள்ளி விளையாடின. மா, பலா, நாரத்தை, கமலா, முதலிய மரங்கள் வளர்ந்து செறிந்து கண்களைக் கவர்ந்தன. செங்கதிர் மேலைக்கடலின் கீழ் தனது ரதத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். அவனது பொற்கிரணம் ஆனந்தச் சோலைக்குத் தங்க மெரு கிட்டதுபோல ஒளிபரப்பிக் கொண்டிருந்தது. கிழக்கே தண்மதி இரவை ஆட்சி புரியப் பவனி வந்துகொண்டிருந்தான்.

தடாகத்தின் எதிர்ப்புறத்தில் வட்ட வடிவமான கீற்றுக் கொட்டகை போடப்பெற்று நாற்காலிகள் மேஜைகள் புத்தக அலமாரிகள் முதலியவை நிறைத்து வைக்கப்பட்டிருந்தன. கொட்டகையின் மேற் கூரையில் பல புஷ்பக் கொடிகள் படர்ந்து சென்றிருந்தன. அகிலவுலக ரேடியோ ஒன்று அதில் அமைக்கப் பெற்றிருந்தது. அக்கொட்டகையிற் கிடந்த ஒரு சாய்மான நாற்கலியில் சாய்ந்த வண்ணம் பானுமதியின் உருவத்தை சிரவணம் செய்துகொண்டிருந்தார்.

சூரியன் நன்றாக அஸ்தமித்து விட்டான். கை ரேகை மறையக் கூடிய அந்திக்காலம்; சோலை முழுவதும் மின்சார தீபம் ஜெகஜோதியாக பிரகாசிக்கத் தொடங்கிற்று. பக்ஷியினங்கள் பலவித சப்தமிட்டுக் கொண்டு தத்தங் கூட்டுக்குள் அடைந்து கொண்டிருந்தன. உதயசங்கரர் தனக்கெதிரில் தோன்றும் வாழைத் தோட்டத்தைக் கவனித்தார். அந்தச் சமயம் பானுமதி கையில் ஒரு கத்தியை ஏந்திக்கொண்டு வாழைத் தோட்டத்திற்குள் புகுந்ததைப் பார்த்தார். அடுத்த நிமிஷம் ஹிருதயத்தில் ஏதோ சுரீரென்று தைத்ததைப் போலும் ஒரு புதிய வுணர்ச்சியைப் பெற்றுத் துள்ளி யெழுந்தார். தன்னை மறந்தவராய் வாழைத்தோட்டத்தை நோக்கி விரைந்து சென்றார். பானுமதி இலை கிள்ளிக்கொண்டிருந்தாள். நிகரற்ற லாவண்யமுள்ள அம்மடந்தையைக் கண்ணாரக்கண்டு திளைத்தார். சுமார் ஐந்து நிமிஷம் வரையில் பானுமதி இளவரசரைக் கவனிக்கவில்லை. அகஸ்மாத்தாக அவரைக்கண்டபோது அவளது மென்மையான சரீரம் பூராவும் நடுங்கி மயிர்க்கூச்செறிந்தது. அவளது செந்தாமரை விழிகள் குறுகுறுவென்று வெருண்டு விழித்தன.

"பானு! ஏன் பயம்? நான்தானே உதயன்! இலை கிள்ளுவதற்கு நீதானா அகப்பட்டாய்?" என்று உதயசங்கரர் பேச்சுக் கொடுக்கலானார். பானுமதி மொழிகளால் பதிலளிக்காது தலையை அசைத்தாள். அந்த சமிக்ஞையில் 'ஆம்' என்று சொல்லுவதைப் போலத் தெளிவான அர்த்தம் தொனித்தது. இளவரசர் பானுமதியின் அருகாமையில் நெருங்கிச் சென்றார். கண் தெவிட்டாக் கட்டழகைக் கண்டு களிகூர்ந்து நின்றார்.

"பாவம் ரோஜா புஷ்பம் போல மெல்லிசான கைகள்! இந்தக் கைகளால்! கடினமான வேலைகளைச் செய்யலாமா? பானு! அந்தக் கத்தியைக் கொடு! நான்கிள்ளித் தருகிறேன்!" என்று கையை நீட்டினார். பானுமதியின் நெஞ்சு அடைப்பட்டுப் போயிற்று. "சுந்தரத்தண்ணி என்ன சொல்லப் போகிறாளோ! உதயசங்கரரின் பேச்சுவார்த்தைகளில் ஏன் இப்படி எல்லைமீறிய அன்பு ததும்புகிறது! ஐயோ! அது விபரீதமான அன்பாகவும் தோன்றுகிறதே! இவரை எப்படித் தப்புவது?'' என்று பானுமதி உள்ளங் கலங்கிப் பெருமூச்சுவிட்டாள்.

"பானு! உனக்கு பாஷை தெரியாதா? அல்லது மௌனவிரதமா? 'கீச்' என்று ஒரு சத்தங்கூடக் கிளம்பவில்லையோ!"

பானுமதி ஒரு வாழை மரத்தின் மறைவில் ஒதுங்கி அஞ்சி நின்றாள்.

"பானு! என்னைப் பார்த்தால் ராக்ஷசன் மாதிரி இருக்கிறதா? கத்தியைக்கொடு!" என்று இன்னும் சற்று நெருங்கினார்.

"பிரபு! நானே அறுத்துக் கொண்டு போகிறேன். தங்களுக்கு சிரமம் வேண்டாம்!"

"காரியத்தை முன்னிட்டுப் பெருமையில்லை. குணத்தை முன்னிட்டுத் தானே உயர்வு!" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போது பானுமதி அறுத்த இலைகளை சரசரவென்று அள்ளிக் கட்டிக்கொண்டு வெளியில் போக எத்தனித்தாள். இதைக்கண்ட இளவரசர் அவள் போவதைத் தடுப்பதற்காக ஒரு சூழ்ச்சி செய்தார்.

"பானு! இரண்டு நாட்களாய் ஆகாரம் செல்லவில்லை! இப்பொழுது என்னமோபோல கண்களைச் சுற்றுகிறது.... .......ஹா!.......ஹா'' என்று சொல்லியவராய் மணலில் உட்கார்ந்தார்.

"பானு! சீக்கிரம் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா! நெஞ்சையடைக்கிறது! ... சீக்கிரம்!" என்று வாழை மரத்தில் சாய்ந்தார். பானுமதியின் உள்ளம் படபடவென்று அடித்துக் கொண்டது.

## சித்த வைத்தியத்தின் வலிமை.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

5. மருந்து, என்பது திருநீறு. இது உயிரின் மலங்களை அகற்ற வேண்டுமென்பதைக் குறிப்பின் உணர்த்துவது. உயிர் பாச மலங்களை நோக்கியிருக்கும்போது பசு என்று பெயர் பெறும். பசு தன் மலத்தை நீக்க வேண்டுமென்பதைக் குறிக்கவே பசுவின் மலத்தை நீறாக்கி யணிவது. ஆகமம் மணி, மந்திர, மருந்தை நன்கு விளக்கும்.

6. யோகம்:- யோகம், ஓகம் என்று முணரப்படும். மனம், மொழி, மெய் முதலில் ஒன்றி அதனால் மலத்தை நீக்க வலிமை பெற்று பதியை யுணர்ந்து எல்லாம் ஒன்றி யிருக்கும் தன்மையை உணர்வதே யோகமாகும். இதற்கு ஐம்பொறியடக்கல் (இயம, நியம) முதலிய வழிகள் உண்டு.

7. ஞானம்:- மேற்கூறிய எல்லாவற்றையும் முற்று முணர்ந்தவர்களே முழு ஞானம் பெற்றவராவர்.

ஆகவே, சித்தர்களின் வலிமை வெறும் வைத்தியத்தில் மட்டுமின்றி மிக்க அவசியமான ஞானத் தெளிவிலும் மேன்மையுற்றிருப்பதை கண்கூடாகக் காணலாம். மருந்தை மாத்திரம் உணருவதால் அது சீக்கிரம் வியாபாரப் பொருளாகி அழியுமென்பது திண்ணம், என்பதைத் தம் பேரறிவால் உணர்ந்த சித்தர்கள் அதற்கு இன்றியமையாத யோக, ஞான வலிமையையும் அமைத்தனர்.

ஒன்று கண்டீ ருலகுக் கொரு
தெய்வமு—
மொன்று கண்டீ ருலகுக் குயிராவது
நன்று கண்டீரினி நமசிவாயப் பழந்—
தின்று கண்டேற்கிது தித்தித்தவாறே.

எனத் திருமூலர் அருளியபடி ஐந்து எழுத்து மூலமாக உலகம் யாவும் ஒன்றியிருக்கும் உண்மையைக் கண்ட சித்தர்களது வலிமை மருந்துக்கு இன்றியமையாததாயிருக்கிறது.

## வைத்திய வலிமை.

"எதிரதாக் காக்கும் அறிவினார்க்
கில்லை
அதிர வருவதோர் நோய்"
—(திருக்குறள்)

என்ற உண்மைப்படி சித்தர்கள் நமது தினசரி வாழ்க்கையையும், பருவ வாழ்க்கைகளையும், நோய் அணுகாது காத்து இனிய வாழ்வைப் பெறும்படியாக அரிய திட்டங்களை வகுத்து வழக்கத்தில் அமைத்ததை இன்றுங்கூட நாம் தெளிந்து போற்றுகிறோம். நோய் வாராது காக்க ஒவ்வொருவருடைய தனிப்பட்ட நடத்தையும் பொதுமக்களிடத்தே யுள்ள கூட்டுறவான நடத்தையும் செப்பம் பெற்றிருத்தல் அவசியம். இவ்வித செப்பத்தை நம் நாட்டில் தவிர வேறு எங்கும் காணுதல் அரிது. நோய் வாராது காக்க உணவும் நடத்தையுமே முக்கியமாகையால் அவற்றைப்பற்றி விரிவஞ்சி, சில குறிப்புகளை மட்டும் ஈண்டு சுருக்கமாக விளக்குகிறேன்.

உணவு:— ஒருஆண்டில் மழை, பனி, வெயில் ஆகிய மூன்று காலங்களில்; தோன்றுதல், நிலைத்தல், மாறுதல் ஆகிய மூன்று சக்திகளையும் கண்கூடாகக் காணலாம். இதையொட்டியே ஒரு நாளில் காலை, நண்பகல் மாலை ஆகிய மூன்று நேரங்களில் தக்க உணவுகளை நாம் உண்ணுகிறோம். உணவில் ஊன் சத்துள்ளவை உடல் வளர்ச்சிக்கும்; கொழுப்பு, சர்க்கரை ஆகிய இருசத்துள்ளவைகள் உடலுக்கு எரிபொருளாக உதவி, செய்யும் தொழிலுக்குத் தக்க வலிமையைக் கொடுத்து உடல் நிலைத்தற்குக் காரணமாகின்றன.

கோதுமை, உழுந்து, பருப்பு, இவை ஊன் சத்துமிக்கவை. அவற்றைக் காலை உணவில் நாம் சேர்த்துக் கொள்ளுகிறோம். ஒரு 'அவுன்ஸ்' பருப்பில் ஒரு 'அவுன்ஸ்' ஊன் சத்துள்ளதென இப்போது ஆராய்ச்சியில் கண்டுள்ளதை 'பிடிக்குப் பிடி சதையாம் பேசு' என்று சித்தர்கள் குறித்துள்ளார்கள்.

அரிசி, எண்ணெய், நெய் இவை சக்கரைச் சத்தும், கொழுப்பு சத்துமாக இருந்து நிலைத்தல் சக்தியாக உதவுகின்றன; இது நண்பகல் உணவு.

இரவு நேரம் நாம் மாற்றங்களைத் தடுக்கக்கூடிய பால் உண்ணுகிறோம். இம் முறை நவீன சத்துணவு ஆராய்ச்யாளர் ஆச்சரியப்படும்படி இருக்கின்றது.

நடத்தை:- ஒவ்வொரு பருவத்தும் நோயைத் தடுக்கக் கூடிய ஒற்றுமைகள் நம்மிடம் அழகாக அமைந்திருக்கின்றன. தை மாதத்தில் ஒரே சமயம் ஊரிலுள்ள அனைவரும் வீட்டுக் குப்பை முதலியவற்றை அகற்றி வெண் சுதை பூசுவதனால் நோய்க்கிருமிகள் ஒருமிக்க ஊரைவிட்டு ஒழிகின்றன.

ஐப்பசி மாதம் சூரிய ஒளி சரியாக இல்லாததால் நோய்க்கிருமிகள் பலப்படுவதை, ஒரே சமயத்தில் கந்தகம், வெடியுப்புப் புகைகள் கொண்டு அவைகளை அழியச் செய்கிறோம்.

கார்த்திகை மாதம் விளக்கொளி கொண்டும் நெருப்பின் உதவி கொண்டும் ஊரை விட்டு நோய்க்கிருமிகளை ஓட்டுகிறோம். எக்காரியத்தையும் ஒற்றுமையினால் எளிதில் செய்து பலன் பெறலாம் என்பதை அவகாசமான சித்திரை மாதத்தில் பெரிய தேர்களை ஒன்று சேர்ந்து இழுத்து ஒற்றுமையின் வலிமையையும் உணருகிறோம்.

கோயில்களை, அதன் கட்டிடத் திறமை அதிலுள்ள கருத்தின் வலிமை தவிர, உடல் வலிமை பெறுவதற்குத் தக்க இடமாகவும் சித்தர்கள் அமைத்திருப்பதை உணருகிறோம். கோயிலில் படைத்து நாம் உண்ணும் பழம், தேங்காய் முதலிய பொருள்கள் நம் உடலைக் காப்பதில் உயர்ந்த பொருள்கள் என்று நவீன ஆராய்ச்சியாளர்கள் கண்டிருக்கிறார்கள்.

பாலும், பாற் பொருட்களும், பழக்குழம்பு முதலியனவும் உயர்ந்த காப்புணவுகள். அவைஎளியோர்க்கும் இலவசத்தில் கிடைக்கக் கூடிய இடம் கோயிலே. இப்போதைய சிசு சம்ரட்சணை சாலைகளைவிட எல்லா மக்களின் உடல் நலத்தினையும் காப்பாற்றுவதில் கோயிலைத் தவிர மேலான கழகங்கள் எதுவும் இருக்கமுடியாது.

## சித்த வைத்தியம்.

சித்தர்களது வைத்திய முறை சித்த வைத்தியம் எனப்படும். சித்தமும் அதனாலேயே இயக்கப்படும். உடலும் நோய்ப்பட்ட காலத்து சித்தத்தைச் சிறப்பாகக் கொண்டு உடலை நன்கு ஆய்ந்து எல்லாக் கருவிகளும் இயற்கையில் இயங்குமாறு வைத்து அவசியமானால் மருந்தையும் உடலில் வைத்து இயக்குவதே சித்த வைத்தியம்.

இது, 4448 நோய்களை, நாடி முதலிய எண்வித சோதனைகளாலறிந்து

(தொடர்ச்சி 12-ம பக்கம் பார்க்க.)

இரசம் 5, உபரசம் 120, உப்பு 25, பாடாணம் 32, வைப்புப் பாடாணம் 32, ஆடுஞ்சரக்கு 64, பல ஆயுதங்கள், எண்ணிறந்த பச்சிலைகள் கொண்டும், மணி, மந்திர, மருந்து கொண்டும் நோய் நீக்குவது. இம்மருந்து எளிதில் நோய் நீக்கவல்லது. சுவை முதலிய குணமுடையது; எளிதில் பெறப்படுவது; உடல் இயலுக்கு ஒத்தது ஆன உயர் குணங்களைப் பொருந்தியது.

### சித்த வைத்யத்தின் வலிமை.

இவ்விதம் சித்த வைத்தியத்தின் வலிமையை நான் ஒருவாறு உணர்ந்த சிறிதளவை என் ஆற்றலுக்கியல ஒரு சிறு கட்டுரையிற் சொல்ல இயலாத எனது எளிமையை நன்கு உணர்ந்தும் 'அகஸ்தியன்' பத்திரிகாசிரியர் வேண்டுகோளை மறுப்பதற்கு அஞ்சி ஒரு சிறிது சொல்லியுள்ளேன்.

ஆங்கில வைத்தியம் (Evolution theory) பரிணும வாதம் என்பதைப் பொருள் விளக்கத்திற்குக் கூறும். சித்த வைத்தியம் வித்தில் மரம் அடங்குவதும் விரிவதும் (Evolution & involution) ஆகிய உண்மையின் இரு பக்கத்தையும் விளக்கும். இதையே மூடவிட வல்லதுமாய் என்றார் தேரையர்.

ஆங்கில பரிணும வாதத்தில் பெரிய உயிர் சிற்றுயிரை உண்ணுவதும் இவ்விதம் ஒன்றைவிட ஒன்று மிக்கு உயர்வதை விளக்கும். இது ஒரு நிலையில் நின்றுவிடும். தமிழில் 'உள்ளது ஒன்று' அதுவே விரிகிறது; அதுவே ஒன்ருகச் சுருங்குகிறது, என அழகாக விளக்கப்படுகிறது.

ஆங்கில வைத்தியம் உடலையும், உடலியக்கங்களையும் அடிப்படையாகக்கொண்டு மருந்து வகுப்பது. நாம் சித்தத்தைத் தலைமையாகக் கொண்டு அதனுல் இயக்கப்படும் உடலில் முக்குற்றங்களை அறிந்து மருந்து கணிக்கின்ருேம். சித்தர்கள் இது கபத்தை நீக்குவது; இது குளிர்ச்சி செய்வது, இது பித்தத்தைத் தணிப்பது என பொருட் குணங்களை விளக்கியிருப்பதின் நன்மையைக் கண்கூடாகக் காண்கிருேம். மற்றவற்றை இவ்விதமே அவ்வப்போது ஆராய்ந்தறிந்து கொள்ளலாம்.

### வலிமை பெறும் வழி.

வலிமை பெறும் வழி பல இருந்தாலும் ஆராய்ச்சிச் சாலை, மருந்துச் சாலை, ஒற்றுமை ஆகிய மூன்றைப் பற்றி மாத்திரம் கூறுகிறேன்.

தமிழ் மருத்துவத்தைப் பற்றிய உண்மைகளின் சாயல்களை அவ்வக்காலத்து இயற்றப்பெற்ற இலக்கியங்களிலும் காணலாம்.

"மீனைத் தேடிச் சுழன்று குளிர்ந்த குளத்திலே மூழ்கி, மீன் கொத்திப் பறவை எழுகின்ற காலத்து அதன் வாயல கொக்கப், புண்களை இழைகொள்கின்ற காலத்து அப்புண்ணின் உதிரத்திலே மறைந்தெழுகின்ற ஊசியினலேற்பட்ட ஊசித்தழும்பும் புண்ணின் வடுவும் பொருந்திய மார்பு" என்பது பதிற்றுப்பத்து 42-வது செய்யுள். ஷை சங்க நூலிலிருந்து 'நேட்டை' என்ற பெயரையுடைய புண்ணைத் தைக்கும் கருவியான நெடு வெள்ளூசியை அறிகிருேம்.

"குறைவறு தெண்ணீர் நதியனை
காந்தபுரத் தொருநல்
விறைமகளார் மகவீனப் பொரு
துட லேங்க வகிர்
துறைவழி யேற்று மகிழ்வூட்டு
மங்கலை தோன்றிவளர்
மறைவழி தேர் நறையூர் நாடுசூழ்
கொங்கு மண்டலமே"

என்ற கொங்குமண்டல சதகச் செய்யுளில், வயிற்றைக் கிழித்து குழந்தையை எடுத்து வயிற்றைத் தைக்கும் முறையைப் பற்றி உணருகிருேம்.


## இருமல் இளைப்பு தீர்ந்து விட்டது!

பழனி
R. M. K. **தாளக பஸ்பம்**

### இருமலுக்கு கைகண்ட மருந்து

நீங்கள் இருமலினுல் என்ன கஷ்டப்பட்டாலும் சரி எத்தனையோ மருந்துகள் சாப்பிட்டு இருமல் தீராதிருந்தாலும் சரி, உங்கள் இருமலை 6 நாளில் கண்டிப்பாய் நிறுத்திவிடும். அது எத்தனை வருஷத்திய ரோகமானுலும் சரி பறந்துவிடும். சீதளம், மழை, பனி காலங்களில் வரும் ஈளை, இருமல், இளைப்பு, கக்கல், மந்தாரகாசம், ரத்தகாசம், கஷ்டசுவாசம, கோழை கபக்கட்டு, அதனுல் மார்பு வலி, விலா வலி, முள்ளந்தண்டு வலி, சிராய்ப்பீனிசம, மூக்கில் ஜலம் ஒழுகுதல், தும்மல், வயிறு உப்புசம், தலைவலி காதுகுடைதல், ஜுரம், மூச்சு திணறுதல், நெஞ்சில் தொண்டையில் கர்முர் என்ற சப்தம், பூனைபோல் கத்துதல், கூவுதல், நுரையீரல் தாபனம் முதலியவை இதில் அவசியம் தீரும் அனுபவத்தில் கைகண்ட அருமையான மருந்து.

25 நாள் தாளக பஸ்பம். அனுபானம் தாளிசபத்திரி சூரணத்துடன் விலை ரு. 10.

தபால் சார்ஜ் அணு. 10. 25 நாள் மருந்திற்கு குறைந்து கொடுக்கப்படமாட்டாது.

வைத்திய ஆசிரியர், **ஆர். எம். கே. வேலுசாமிபிள்ளை,**
**சித்த வைத்தியசாலை, பழனி.**

தந்தி விலாசம்:
"வேலுசாமி" பழனி.


Edited, Printed and Published by G. DAKSHNAMOORTHI at his 'Victoria press',
TIRUTURAIPUNDI.